Published on 14, Jan-2025 ISSN: 3049-2688 (Online)

# பாட்டியல் உரைகளின் அமைப்பு

முனைவர் ஞா. விஜயகுமாரி
உதவிப் பேராசிரியர்
அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி
மீனம்பாக்கம். சென்னை– 600 061

## முன்னுரை

பாக்களின் பொருத்த அமைப்புகளையும் பாக்கள் பலவற்றால் படைக்கப்பெறும் இலக்கிய வகைகளையும் குறித்த இலக்கணங்களை எடுத்து உரைக்கும் பாட்டியல் நூல்களின் உரைகளின் அமைப்பைப் பற்றி கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது

பாட்டியல் நூல்களுக்கு எடுத்த பழைய உரைகளின் அமைப்பு மட்டுமே இங்கு நோக்கப் பெறுகின்றன. பண்டைய பாட்டியல் உரைகள் பிற இலக்கண உரைகள் போலவே அமைந்துள்ளன. எனினும் பிற இலக்கண உரைகள் போல விரிந்த நிலையிலோ மிகுதியாக மேற்கோள் காட்டும் போக்கையோ சிறப்புகளையோ பெரிதும் கொள்ள வில்லை என்று கூறலாம்.

பாட்டியல் உரைகள் பெரிதும் சுருக்கமாகவே அமைந்துள்ளன. இலக்கிய வகைப் பற்றிக் கூறும் இடங்களில் முழுமையாக இலக்கியங்களை எடுத்துக்காட்டல் என்பது சாத்தியமற்றது. ஆகையால் உதாரணங்கள் இந்த உரைகளில் மிகுதியும் இடம்பெறவில்லை. பாட்டியல் இலக்கண செய்திகளுள் வடமொழி இலக்கண செய்திகளும் இடம்பெற்றுள்ளதால் வடமொழி சார்ந்த சொற்கள், ஆட்சிகள் ஓரளவு காணப்படுகின்றன.

பாட்டியல் இலக்கண உரைகள் தமது அமைப்புகள் இலக்கண நூற்பாக்களை மேற்கோள்களாக கொண்டுள்ளன. சில இடங்களில் இலக்கிய இலக்கணங்களில் இருந்து மேற்கோள்களாக கொண்டுள்ளன.

## வெண்பாப் பாட்டியல் உரையின் அமைப்பு

### எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிச் செல்லும்திறம்

தொடர்நிலைச் செய்யுள் பெயர் பெரும் வகைகளை வெண்பாப் பாட்டியல் உரையாசிரியர், நிரல் பட மொழிகின்ற விளக்கிச் செல்லுகின்ற, நடைப்போக்கு குறிப்பிடத்தக்கது ஆகும்.

அப்பகுதியினை இங்கு நோக்குதல் தகும்.

**"யானைத்தொழில் என்னும் பெயர் தொழிலால் வந்தது. பன்னிருபடலம், நூற்றந்தாதி, குறுந்தொகை, நெடுந்தொகை என்பன அளவு பற்றி வந்தன. கார்நாற்பது முதலாயின காலம் பற்றி வந்தன. கலித் தொகை, வெண்பாமாலை என்பன பாப்பற்றி வந்தன. அங்கமாலை, நயனப்பத்து, பயோதரப்பத்து என்பன உறுப்புப்பற்றி வந்தன. பாதாதிகேசம், கேசாதிபாதம் என்பன எல்லைப்பற்றி வந்தன. தொல்காப்பியம் அவிநயம் கல்லாடம் என்பன பாடினானைப் பற்றி வந்தன."**

### வெண்பாப்பாட்டியல் உரையில்,

"ஒற்றைப்பட வருவன வியநிலை" இரட்டைப்பட வருவன சமநிலை"

### மேற்கோள் நூற்பாக்களின் உவமைச் சிறப்பு

வெண்பாப் பாட்டியலின் பாயிர உரையில் இடம்பெற்றுள்ள. மேற்கோள் நூற்பாக்கள் அழகிய உவமைகளைக் கொண்டு திகழ்கின்றன. இதனைப் பாட்டியல் இலக்கண ஆய்வாளர் மருதூர் அரங்கராசன் தமது "இலக்கண வரலாறு — பாட்டியல்" நூலில் விரிவாக எடுத்து விளக்கியுள்ளார்.

### அப்பகுதியை இங்கு நோக்குதல் தகும்.

**"வெண்ணிறம் நன்மாணாக்கர்கட்கு உவமை கூறப் பட்டுள்ளது. ஏன் தெரியுமா?**

எந்திறம் தோய்தற்கும் ஏற்ப தாதல் நன்னிறத் தியல்பென நாடினர் கொளலே'

என்பது மேற்கோள் நூற்பா. எந்நிறத்தையும் வெண்ணிறம் ஏற்றல் போல, எக்கருத்தையும் நன்மாணாக்கர்கள் ஏற்பர் என்பது கருத்து. கூட்டமாய்த் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் இயல் புடைய யானைகளும் நன்மாணாக்கர்கட்கு உவமை ஆக்கப் படுகின்றன.

குழூஉபடூஉப் புறத்தருதல் குஞ்சரத் தியல்பே

என்பது மேற்கோள் நூற்பா. யானைகளின் ஒற்றுமையை நன்மாணார்கர்களும் பின் பற்றுவர் என்பது கருத்து. ஒலியை உற்றுக் கேட்டு உணரும் ஆற்றலுடைய ஆனேறும் நன்மாணாக்கர்கட்கு உவமையாக்கப் பட்டுள்ளது.

"பிறந்த வொலியின் பெற்றியோர்ந் துணர்தல்

சிறந்த ஆனேற்றின் செய்திஎன்ப"

என்பது பாயிரவுரையிற்கண்ட மேற்கோள் நூற்பாவாம்."

## மேற்கொள் ஆட்சி

மூலநூலின் செய்திகளை விளக்குவதற்காக இந்திரகாளியம் நூலின் நூற்பாக்களை வெண்பாப் பாட்டியலின் உரையாசிரியர் மேற்கோள்களாக காட்டியுள்ளார். உரையில் காட்டப்பெற்றுள்ள இந்திர காளியம் நூற்பாக்களை இங்கு நோக்குதல் தகும்.

## எடுத்துக்காட்டு

"அமுதெழுத்தென்றவாதியுயிர் நான்கொடும்,

புணர்ந்த மெய்யைபுணர்ந்தமுசென்ப,
மெய்யாமமுதின்

மேவியவுயிரும் பொய்தீர் புலவர்
பொருந்தின வென்ப

நஞ்சா மொற்றொடு நடற்தவுயிர்களும்
வஞ்சமில் புலவர்.

மறுத்திலரென்ப, இருவகையுண்டி யென்றெ
டுத்தன வல்ல,

தாமேநிற்பினுந்தோமில் வென்ப"

## உரை நடை நலம்

"இச்சூத்திரட் கதிரென்ப பொதுப்படக் கூறியது கதிரிரண்டுங் கோடற்கு படைப்பை யதிகாரத்தாற்றம்"

இக்கொள்ளா தெடுத்தோதித் தொடுத்தமை படைப்பு. வேண்டாமை முதனூறமுவிற்றாத லானும் பிறர் நூன் முடிந்தது தானுடன் படுதலானு மென்க. அன்றியுமிவ் வெழுத்து கட்குத்தெய்வம் அவ்வவர்களெனக் கொள்ளப் பாட்ட தெளினுமமையும்."

நேரில் உரையாடி கட்டளை இடுவது போல அமைந்துள்ளது.

"நிறுத்த முறையானே ஆசுகவி பேசுகின்றது. இவ்வெழுத்தாலே பாடுக. அச்சொல்லாலே பாடுக. இப்பொருளாலே பாடுக.
இந்தயாப்பாலே பாடுக.
இவ்வலங்காரத்தாலே பாடுக. என்றொருவன் சொன்னவுள்ளுரைக்க வானதிரேபாடப் பாடுவது ஆசுகவியாம்.

சில உறுப்புகளைத் தனித்து விளக்குதல்

"ஊரென்றது குடிமை இரங்கல் என்பது காமம்மிக்க கழிபட கிளவி"

வேறுபெயர் சுட்டல்

ஓவியந்தாதியை, ஒவியலந்தாதி என்பாரும் உளர்". பிற நூலார் கருத்தை வேறுபட்ட விளக்கத்தைச் சுட்டுதல்

"அருந்தாதி கற்பின் மகளிர்க்குள்ள இயற்கை

குணங்களை வகுப்பாற் பாடுவது
தாரகைமாலை

என்பாரும் உளர்."

## வரையறுத்த பாட்டியல்

வரையறுத்த பாட்டியல் நூலின் உரையில் மங்கலச் சொல்லினுக்கு பொருந்திய பெயர்களை எடுத்துரைத்து உதாரணம் காட்டி, மேலும் ஒவ்வொரு காரிகையின் உரையறும்,

"பாவிற் கியைந்தபடி பாடுக" என உரையாசிரியர் சுட்டிச் சென்றுள்ள பாங்கு அழகுற அமைந்துள்ளது. மேலும் இறுதி காரிகையின் உரையில், உரைவேண்டாது காரிகையே பொருள் தெளிவாக அமைந்துள் ளமை சுட்டிச்செல்லுதல் பாங்குற அமைந்து ள்ளது. அப்பகுதியை இங்கு நோக்குதல் தகும்.

இச்செய்யுளுக்கு பொருள் விளக்கிக் கிடந்தமையின் விரித்திரைத்துக் கொள்ள வேண்டும்.

## நவநீதப்பாட்டியல்

நவநீதப்பாட்டியலுக்கு இரண்டு உரைகள் கிடைத்துள்ளன. உ.வே.சாமிநாதையர் நூலக பதிப்பில் உரை எனக் காட்டப்படுவது குறித்து மருதூர் அரங்கராசன்,

"பழமையானது, விரிவானது, சிறப்பானது இவ்வுரையின் காலத்தை துள்ளியமாக அறிய கூடவில்லை எனினும், தண்டியளங் காரத்திற்குக் காலத்தார் பிந்தையது என்ற மட்டில் கூறமுடியும்" எனக் குறிப்பிட்டு ள்ளார்.

### மேற்கோள் ஆட்சி

நவநீதப் பாட்டியலின் பழமை வாய்ந்த உரைக் காட்டுகின்ற மேற்கோள்கள் உரையாசிரியரின் பன்னூர் பயிற்சியை, இவர்களை ஆழத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளது. தொல்காப்பியம் தொடங்கி மாமூலம், பருணர் பாட்டியல் இந்திர காளியம் என பல இலக்கண நூல்களில் இருந்து இவ்வுரை மேற்கோள் காட்டுகிறது.

### நவநீதப்பாட்டியலுக்கு அமைந்துள்ள இரண்டாம் உரை

இவ்வுரை முதல் உரை அளவிற்கு இரண்டாம் உரை இல்லை. இவ்வுரையில் தொல்காப்பியம் தொடங்கி இந்திரகாளியம் கல்லாடனார் வெண்பா ஆகிய நூல்களில் இருந்து மேற்கோள்களை காட்டியுள்ளார். 'கல்லானார் வெண்பா' என்ற பெயரில் இவ்வுரை காட்டும் நூல் பழைய பாட்டியல் நூல் ஒன்றை குறிப்பதாக இருத்தல் ஆகும். அந்த நிலையில் இந்த உரை வழங்கும் அறிய செய்தியாக இதனைக் கருதலாம். மேலும் சங்கங்கள் இருந்த இடம் குறித்த முத்து மரபுச் செய்திகளுக்குப் மாறாக, "முதற் சங்கம் கபாடபுரத்திலும் இடைச்சங்கம் உத்திரமதுரையில் கடைச்சங்கம் சிறுமதுரை யிலும் இருந்தாக இவ்வுரை மாற்றிக் கூறுகின்றது. சங்கங்களில் இருந்த புலவர் எண்ணிக்கையும் இவ்வுரை மாற்றிக் குறிப் பிடுகிறது. இவை எண்ணத்தக்க குறிப்புகளாக அமைகின்றன.

### சிதம்பரப்பாட்டியல் உரை

சிதம்பரப்பாட்டியலுக்கு இரு வகையான உரைகள் உள்ளன. முதல் மூன்று இயல்க ளுக்கு ஒரு புலவரால் எழுதப்பட்ட உரையும் உள்ளன. இறுதி இரண்டு இயல்க ளுக்கு வேர் ஒருவர் புலவரால் எழுதப்பட்ட உரை யும் உள்ளன. முதல் மூன்று இயல்களுக்காக உரை விரிந்த நிலையில் அமைத்துச் செல்கிறது. இந்த மூன்று இயல்களும் யாப்பு செய்திகளைப் பேசுவன. எனவே யாப்பருங் கால விரித்தி உரையை அடியொற்றியே இந்த உரை அமைந் துள்ளது. இந்த உரையில் அமைப்பை இயல்பை உரை மருதூர் அரங்கராசனின் பின்வரும் மதிப்பீடு துணைச் செய்யும்.

*"நூற்பா நுவல் பொருளை நனி விளக்கிச் செல்லல். நூற்பா கூறாது விட்ட பொருளை இலேசினாலும் மிகையாலும் சுட்டிச் செல்லல் பல்வேறு இலக்கண நூல்களினின் றும் தகுந்த மேற்கோள்கள் காட்டல். உகந்த எடுத்துக்காட்டுகளால் கூற எடுத்துக் கொண்ட பொருளைப் புரியச் செய்தல் என்றின்னவாறு பல சிறப்புக் கூறுகளுடன் உரை நடக்கிறது"*

சிதம்பரப் பாட்டியல் உரை குறித்து மு.அருணாசலம் அவர்கள் கருத்துரை

*"சிதம்பரப் பாட்டியலின் முதல் மூன்றியல் களுக்கான உரையின் இயல்புகளை மு. அருணாசலம் விளக்கமாகக் குறிப்பிட்டு ள்ளார். இவ்வுரையினையும் ஆசிரியரே செய்து வைத்தாரா எனத் தெரியவில்லை எனும் மு.அருணாசலம் உரை செய்தார். ஆசிரியரின் நேர் மாணாக்கரே என்று கருதலாம் என்கிறார். யாப்பருங்கல விருத்தி யுரையைத் தழுவியே இவ்வுரை அமைந்து ள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகின்றார். இவ்வுரையைத் தழுவிப் பிற்காலத்தில் இலக்கண விளக்கச் செய்யுளியலுரை அமைந்தது எனவும் கூறுகிறார்."*

ஒழிபியலின் கடைசி விருத்த உரையில் அச்சுக்கலை, சாரம் முதலிய நூற்பெயர்கள் காணப்படுதல் குறித்துப் பேசும் மு. அருணாசலம்.

இவற்றுள் பிற்காலத்தில் கழிநெடில் என்ற பெயரால் பாடல்களும் நூல்களும் உள்ளன. திருவிருக்குக் குறள் என்பது தெரியவில்லை சம்பந்தர் தேவாத்துள் திருவிருக்குக் குறள் உள்ளது. அச்சுக் கலை என்பது விளங்கு வில்லை; கலையாற் பெயர் பெற்றது எவ்வாறு என்பதும் தெரியவில்லை; ஒருகால் பிற்கால வண்ணப் பாடல்களின் பகுதிக்கு வழங்கத் தொடங்கிய கலை என்ற சொல்லா என்பது விளங்கவில்லை. அப்படியே சாரம் முதலாயினவையும் என்ற இவர் சொல்வது. சாரம் என்பது ஓர் அலங்காரம் என்று பாப்பாவினம் பாடல் 72 உரையில் சொல்லப்படுள்ளது. அச்சுக்கலை சாரம் என்ற பெயருடைய நூல்களும் அவற்றில் யாப்பு விகற்பங்களும் இருந்தன போலும்."!!

என உரையின் சில குறிப்புகள் விளங்கா நிலையினவாய் உள்ளமையைக் கோடிட்டுக் காட்டியுள்ளார். மு.அருணாசலம் கருத்துரை நினையத்தக்கதாக நிலவுகின்றது. சிதம்பரப் பாட்டியல் ஆய்வுப் பதிப்பு என்றும் நூலில் ய.மணிகண்டன் பதிப்பில் வெளி வந்தது.

### இலக்கண விளக்கம்

இலக்கண விளக்க உரை வைதியநாத தேசிகரால் எழுதப் பெற்றது. இந்த உரையில் பாட்டியல் காட்டும்

*"உரை மிகவும் சிறந்தது என்பதில் ஐயமில்லை. கருத்துரைத்துப் பொழிப்புத்*

திரட்டி அகலங் கூறுவதாக உரை அமைந்துள்ளது. இலக்கண மேற்கோள்களும் இலக்கிய எடுத்துக்காட்டுகளும் உரையை வளப்படுத்தி நூலைப் புரிந்துகொள்ளத் துணை நிற்கின்றன."

மருதூர் அரங்கராசன் இலக்கண வரலாறு பாட்டியல் நூல்களில் குறிப்பிடுகிறார்.

### தொன்னூல் விளக்கம்

தொன்னூல் விளக்க உரை வீரமா முனிவாராலே எழுதப் பெற்றது. இந்த உரை பாட்டியல் இலக்கணம் கூறும் பகுதியில் பல இலக்கண இலக்கிய நூற்பாக்களை மேற்கோள் காட்டுகின்றது. தமிழ் நூல் பரப்பை இவ்வுரை கற்போற் கண்முன் கொண்டு வந்து காட்டுகிறது. வடமொழி இலக்கண செய்திகள் பலவற்றை இந்த வுரைக் கொண்டுள்ளது. தமிழ் இலக்கண கலைச்சொற்களுக்கு நிகரான பழமொழி கலைச்சொற்களை இவ்வுரை தருகின்றது. மூலத்தில் இல்லாத பல பாட்டியல் இலக்கண செய்திகளை இந்த உரை 'உரையிற் கோடலாக' காட்டுகின்றது.

### சான்றுகள் கூறல்

"இலக்கியச் சான்றுகளையும் பிற சான்று களையும் தந்து தம்முரையை நடத்திச் செல்கின்றார். திருக்குறள் சிந்தாமணி, கம்பராமாயணம், நைடதம், தேம்பாவணி போன்றவற்றில் இருந்து அதிகமான சான்று களைத் தருகிறார். மூதுரை, திரிகடுகம், நாலடியார், சிலம்பு போன்ற இருபதிற்கும் மேலான- நூல்களினின்றும் சான்றுகள் தந்துள்ளார். ஒரே கருத்தை விளக்க ஒன்றுக்கு மேற்பட்ட சான்றுகள் தருவதும் உண்டு. சில சான்றுப் பாடல்களை ஆசிரியரே எழுதியிருக்கக் கூடும் என்று கருதுவர் டாக்டர் ச.வே.சுப்பிரமணியன் அவர்கள்"

### உரைகளில் வடமொழி கலப்பு

தமிழிலக்கணக் கலைச்சொற்கட்கு இணை யான வடமொழிக் கலைச் சொற்களை நூலுரையின்கண் பல இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளார் உரையாசிரியர்.

"உயிர்-சுரம், மெய்- வியஞ்சனம், பெயரெச்சம் -சந்திராந்தம், வினையெச்சம்-துவாந்தம், விளி -சம்போதனம், தன்மை-உத்தமன், முன்னிலை- மத்தியமம், படர்க்கை - பிரதமன் என்று வருதல் காண்க. இவை போன்ற சொற்கள் அறுபத் தொன்றைத் என்று வதளிக்கிறார் ச.வே. சுப்பிரமணியன். இவற்றை நோக்க தெமாமுனிவரின் வடமொழிப் புலமை தெற்றென விளக்கும்."

### மேற்கோள் ஆட்சி

"தம்முடைய கருத்தினை வலியுறுத்த ஒத்த கருத்துடைய நூற்பாக்களைப் பிற நூல்களினின்றும் ஆங்காங்கு ஆண்டுள்ளார். தொல்காப்பியம் நன்னூல், நம்பியகப் பொருள் போன்ற இருபதிற்குக் குறையாத இலக்கண நூல்களினின்றும் மேற்கோள்களை ஆண்டுள்ளார். ஒவ்வோரதிகாரத்தின் இறுதி யிலும் தாம் ஆண்ட மேற்கோள் நூற்பாக் களின் எண்ணிக்கையைச் சுட்டியுள்ளார்."

உரையின் சிறப்புகளை மருதூர் அரங்க ராசன் மேற்கோள் காட்டியுள்ளார்.

### உரைகளில் வரும் நூற்பெயர்கள்

பாட்டியல் உரைகளில் பிற நூல்களில் இருந்து இலக்கணம். இலக்கியம் மேற் கோள்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள் உரை யாசிரியர்கள். வெண்பாப்பாட்டியல் எழுதிய சந்திரசேகர் கவி ராயர் அவர்கள் 1854 எழுதிய உரையில் மேற்கோள்பாடல்கள் கொடுக்கவில்லை. பின்னடி வந்த 20 ஆம் நூற்றாண்டு உரைகளில் மேற்கோள் பாடல்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

### நவநீதப்பாட்டியல்

மாமூலம், இந்திரகாளியம், பருணர் பாட்டியல், பொய்கை யார் செய்யுள் வகைமை பொய்கையார் கலாவியல், முன்னி யார் கலித்தொகை, கல்லாடம், பிரபந்த தீபம், தண்டியலங்காரம், நன்னூல், யாப்பரு ங்கலவிருத்தி, அகத்தியனார் ஆனந்தவோத்து கல்லாடனார் வெண்பா, கல்லாடனார் கலாவியல் அவிநயனார் கலாவியல், திருப்பிரவாசிரியர் தூக்கியல் அணியியல் போன்ற இலக்கண நூல்களில் இருந்து மேற்கோள் கட்டியுள்ளார்கள்

### சிதம்பரப் பாட்டியல்

யாப்பருங்கல விருத்தியுட் கண்டு கொள்க என்று சுட்டிச் சென்றுள்ளதாலும், காட்டப் படுகின்ற மேற்கோட்பாடல்களில் பெரும் பாலான யாப்பருங்கல விருத்தியின்றும் எடுக்கப்பட்டவை யாக உள்ளதாலும் உரையாசிரியர் யாப்பருங்கால விருத்தியை அடியொற்றியே இவ்வுரை வரைந்துள்ளார்.

தொல்காப்பியம், யாப்பருங்கலம், யாப்பருங் கலவிருத்தி, யாப்பருங்கலக் காரிகை, நன்னூல் போன்ற இக்காலத்தும் வழக்கியுள்ள நூல்களினின்றும் மேற்கோள் காட்டிய தோடு அல்லாமல் அவிநயனார் மாபுராண முடையார் ஆகியோர் பெயராலும் மேற்கோள் கூறப்பட்டுள்ளதாக இவ்வுரை பழைய உரையில் காணப்படுகிறது.

## தொன்னூல் விளக்கம்

இலக்கியச் சான்றுகளையும், பிற சான்று களையும் உரைகளில் எடுத்துக்காட்டியுள் ளார். திருக்குறள், சிந்தாமணி, கம்பராமாய ணம், நைடதம், தேம்பாவணி, தண்டியலங் காரம் போன்ற நூல்களில் இருந்த எடுத்து தந்து இருக்கிறார். மூதுரை, திரிகடுகம், நாலடியார், சிலப்பதிகாரம் போன்ற இருபதி ற்கும் மேலான நூல்களின்றும் தந்துள்ளார். இவ்வுரையில் ஒரே கருத்தை தந்து ஒன்றுக்கு மேற்பட்ட சான்றுகளையும் தந்துள்ளார்.

சில சான்றுப் பாடல்களை ஆசிரியரே எழுதியிருக்கக் கூடும் என்று கருதுவார் ச.வே.சுப்பிரமணியன்.

**"தப்பாத மூன்றைத் தேழொன்பான் றவரில்வென றொப்பா முதற்சீர்க் குரை செய்வர்-செப்புங்காற் றண்டாத நாவலநெட் கொண்டா ரெழுத்தின் குறி." டாகா தவிர்கென்று.**

## தொன்னூல் விளக்கம்

இலக்கியச் சான்றுகளையும், பிற சான்று களையும் உரைகளில் எடுத்துக்காட்டியுள் ளார். திருக்குறள், சிந்தாமணி, கம்பராமாய ணம், நைடதம், தேம்பாவணி, தண்டியலங் காரம் போன்ற நூல்களில் இருந்த எடுத்து தந்து இருக்கிறார். மூதுரை, திரிகடுகம், நாலடியார், சிலப்பதிகாரம் போன்ற இருபதிற்கும் மேலான நூல்களின்றும் தந்துள்ளார். இவ்வுரையில் ஒரே கருத்தை தந்து ஒன்றுக்கு மேற்பட்ட சான்றுகளையும் தந்துள்ளார்.

சில சான்றுப் பாடல்களை ஆசிரியரே எழுதியிருக்கக் கூடும் என்று கருதுவார் ச.வே.சுப்பிரமணியன்.

**"தப்பாத மூன்றைத் தேழொன்பான் றவரில்வென றொப்பா முதற்சீர்க் குரைசெய்வர்-**

**செப்புங்காற் றண்டாத நாவலநெட் கொண்டா ரெழுத்தின் குறி." டாகா தவிர்கென்று**

## இலக்கண விளக்கம்

தொல்காப்பியம் மாமூலம், இந்திரகாளியம் சங்க இலக்கியம், திருமுருகாற்றுப்படை, திருக்குறள், இலக்கண விளக்க புறத் திணையியல், திருவாசகம், திருஅம்மானை, திருவாய்மொழி, சீவகசிந்தாமணி, அகத்திய னார் ஆனந்த வோத்து, வருணர் பாட்டியல் விக்கிரம சோழனுலா என்று கூறப்படுகிறது. தொல்காப்பியம் நம்பியகப்பொருள் புறப் பொருள் வெண்பா மாலை யாப்பருங்கல காரிகை போன்ற இலக்கண நூல்களில் உரை எவ்வாறு அமைந்துள்ளதோ அப்படியே பிற்காலத்தில் தோன்றிய பாட்டியல் நூல் களிலும் அமைந்துள்ளது. பழைய உரைகள் எல்லாம் எளிமையாக புரிந்துக்கொள்ளும் அளவுக்குப் பாட்டியல் உரை அமைந்துள்ளது.

## முடிவுரை

பத்தாம் நூற்றாண்டின் பன்னிருபாட்டியல் தொடங்கி இரு பதாம் நூற்றாண்டின் யாப்பு நூல் ஈறான இலக்கண நூல்கள், பாட்டியல் இலக்கண வளர்ச்சிக்கு அளித்துள்ள.

இயலில் பாட்டியல் இலக்கண நூல்களுள் பன்னிரு பாட்டியல். பிரபந்தத் திரட்டு, சுவாமிநாதம், பிரபந்த தீபிகை, பொருத்த விளக்கம், பிரபந்த தீபம் ஆகிய நூல்களுக்குப் பழைய உரை இல்லை எனினும் இக்காலத்தார் எழுதிய உரைகள் உள்ளன.

தமிழ் இலக்கண உரை வரலாற்றில் பாட்டியல் நூல்களுக்கு எழுந்த பழைய உரைகளுக்குக் குறிப்பிடத்தகுந்த இடமுண்டு.

பாட்டியல் இலக்கண உரைகள் ஓரளவு சுருக்கமாகவே அமைந்துள்ளன. வடமொழிச் செய்திகளை ஒப்பிட்டுக் காட்டு கின்றன. வடமொழிக் கலைச்சொற்களை இணைத்துச் சுட்டு கின்றன. முந்தைய பிற பாட்டியல் இலக்கண நூல்களின் நூற்பாக்கள் பல வற்றை மேற்கோள்களாகக் காட்டுகின்றன. ஆங்காங்கு நடை நயம் மிளிரும் தொடர் களைக் கொண்டுள்ளன. தொடர்புடைய பிற பாட்டியல் நூலாரின் கருத்துக்களை ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

## துணைநூல் பட்டியல்கள்

1.அரங்கராசன் ச.மருதுதூர் இலக்கண வரலாறு பாட்டியல் நூல்கள் பாலமுருகள் பதிப்பகம் மருதூர் அஞ்சல் உடையார் பாளையம் வட்டம் .முதல்பதிப்பு —டிசம்பர் 1983

2.அரங்க நலங்கிள்ளி — பாட்டியல்கள் (ஓர் அறிமுகம்) வாணிதாசன் பதிப்பகம் புதுவை முதல்பதிப்பு—1986

3.அருணாசலம் .மு தமிழ் இலக்கிய வரலாறு பதின்மூன்றாம் நூற்றாண்டு முதல் பதிப்பு 1970

4.இராகவையங்கார்.மு. சிதம்பரப் பாட்டியல் உரையுடன் செந்தமிழ்ப் பிரசுரம் மதுரை தமிழ்ச்சங்க முத்திரா சாலைப் பதிப்பு. 1911

5 ஜெயராமன் ந.வீ – பாட்டியல் திறனாய்வு மணிவாசகர் நூலகம் 241. லிங்கிச் செட்டித் தெரு சென்னை—01.